**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.மு.ச.ஸ்ரீநாத்.,B.A.,B.L.,(Hons.) L.L.M.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.3/2025 இன் அ.வ.எண்.356/2018**

கண்ணம்மாள் ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. மாவட்ட ஆட்சியர், கோயமுத்தூர்
2. சார் ஆட்சியர், பொள்ளாச்சி
3. வட்ட ஆட்சியர், கிணத்துக்கடவு
4. வருவாய் ஆய்வாளர், கிணத்துக்கடவு
5. கிராம நிர்வாக அலுவலர், சொக்கனூர்
6. ஹரிராம்
7. C.மயில்மாணிக்கம்
8. ஊராட்சிமன்ற தலைவர் , சொக்கனூர் ஊராட்சி

....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 14.08.2025 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.மதிசேகர் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் திரு.S.தேவசேனாதிபதி அவர்கள் முன்னிலையாகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும் இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**ஆணையுரை**

இம்மனுவானது நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்து அமைந்துள்ள க.ச.18 1/C2 நெ.காலையில் உள்ள பு.ஹெக்.0.14.0 தீர்வை 3.38

மற்றும் மேற்படி பூமியில் பயிர் செய்துள்ள 19 தென்னை மரங்களையும் மற்றும் அதில் பயிரிட்டுள்ள பயிர்களையும் இயற்கை அமைப்பையும் பார்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 பிரிவு 151ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர் தரப்பில், மனுதாரர்/ வாதி தான் 1 முதல் 7எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை பரிகாரமும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து சொக்கனூர் கிராமத்தில் அமைந்துள்ளது. மேற்படி சொத்து வருவாய் ஆவண வகைப்பாட்டின் படி நத்தம் புல எண் 950 12க்கு கட்டுப்பட்டது ஆகும். மேற்படி பூமியானது வருவாய் ஆவணங்களின் படி க. 18 102 நெ. காலையில் உள்ள பு.ஹெக்.0.140 தீர்வை 3.38 மற்றும் மேற்படி பூமியில் 19 தென்னை மரங்களையும் பயிர் செய்துள்ளார். மேற்படி பூமியை மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச.15/1 தற்போது உட்பிரிவின் படி 15 /4 காலைக்கு கட்டுப்பட்ட பூமிகளுடன் சேர்ந்து சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக முன் பாத்தியஸ்தரும் மனுதாரரின் கணவரும் அதன்பின்பு மனுதாரரும் அனுபவித்து வருகின்றனர். மேற்படி க.ச.18 1/C2 காலையில் தோட்டத்துச் சாளையும் அமைந்துள்ளது. தாவாச் சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவ சுவாதீனத்தில் வைத்து மராமரத்துக்கள் செய்தும் அபிவிருத்திகள் செய்தும் அனுபவித்து வருகிறார். மேற்படி பூமியில் உள்ள தென்னை மரங்கள் பலன் தந்து கொண்டிருக்கிறது. எனவே மேற்படி தாவாச் சொத்தை நீதிமன்ற ஆணையரை நியமித்து அதன் இயற்கை அமைப்பு மற்றும் தற்போதை நிலையை பார்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே நான்

தாவாச் சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** 5ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுக்கள் பொய்யும் மோசடியுமானது. சட்டப்படியும். நியாயப்படியும் நிலைத்தக்கது அல்ல. தாவா சொத்தானது சொக்கனூர் கிராமம் நத்தம் க.ச .எண்.959/12க்கு கட்டுப்பட்ட 34½ செண்ட் நிலம் ஆகும். தாவா சொத்தை ஆக்கிரமித்து விவசாயம் செய்ய மனுதாரருக்கு எந்த உரிமையும் இல்லாத போது அதில் மனுதாரர் 19 தென்னை மரங்கள் பயிர் செய்து தனக்கு பாத்தியப்பட்ட க.ச.எண். 15/4 பூமியோடு சேர்த்து விவசாயம் செய்து வருவதாக கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையரை நியமித்து அதன் இயற்கை அமைப்பு மற்றும் தற்போதைய நிலையை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய எந்த அவசியமும் இல்லை. அசல் வழக்கை கடந்த 2018-ம் வருடம் தாக்கல் செய்து வழக்கை காலதாமதப்படுத்தவே பொய்யான காரணங்களைக் கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே இம்மனுவானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு கட்சிகளும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது மனுதாரர் இம்மனுவில் தான் தோட்டசாளை அமைத்து தனிப்பட்ட முறையில் அனுபவ சுவாதீனத்தில் வைத்து மராமரத்துகள் செய்தும் அபிவிருத்திகள் செய்தும் அனுபவித்து வருவதாகவும் மேற்படி பூமியில் தென்னை மரங்கள் பலன் தருவதாகவும் கூறி அதனால் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையரை நியமித்து அதன் இயற்கை அமைப்பு மற்றும் தற்போதைய நிலையைப் பார்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

7) ஆனால் மனுதாரர் இம்மனுவில் அத்தகைய நீதிமன்ற ஆணையர் அறிக்கையானது இவ்வழக்கு விசாரணைக்கு எவ்வாறு பயன்படும் என குறிப்பிடவில்லை. மேலும் ஒரு சொத்தின் அனுபவ சுவாதீனத்தை நிரூபிக்கவும் சாட்சியங்களை சேர்க்கவும் நீதிமன்ற ஆணையர் நியமிக்க இயலாது என்பதே அடிப்படைச் சட்ட விதியாகும். ஆனால் மேற்படி சட்டத்திற்கு முரணாகவே மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது உள்ளதால் இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் காண்கிறது. எனவே இம்மனு தள்ளுபடிக்குரியது என இந்நீதிமன்றம் காண்கிறது.

முடிவில், இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/........(மு.ச.ஸ்ரீநாத்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

ஒம்/........(மு.ச.ஸ்ரீநாத்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-------------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

இ.ம.எண்.03/2025 இன் அ.வ.எண்.356/2018

நாள் : 25.08.2025

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-------------------------------------